**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 22/2016**

**Deposition of Witnesses for PW 1**

| Name | : | மாரிமுத்து | Caste: |
|---|---|---|---|
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **28.02.2020**

முதல் விசாரணை

நான் தற்போது விராலிமலை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.10.2015 ம் தேதி ராமநாதபுரம் என் ஐபி சிஐடியில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இரவு 19.15 மணிக்கு ஆய்வாளருடன் பணியில் இருந்தபோது ராமநாதிபுரம் கியூ பிரான்ச் ஆய்வாளர் திரு . கென்னடி அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பரில் ராமநாதபுரம் NIB CID ஆய்வாளர் தலைமைக் காவலர் திரு. குமரேசன், ராஜாங்கம் 1473, நானும் கியீ பிரான்ஜ் ஆய்வாளர் திரு. கென்னடி உதவி ஆய்வாளர் கியூ பிரான்ச் உதவி ஆய்வாளர் பெரியசாமி, மற்றும் ஒரு உதவி ஆய்வாளர் தலைமைக் காவலர் 1472, 1522. மு.நி.கா. 1690 வருவாய்துறையினர் எஸ்பி பட்டிணம் கிராம நிர்வாக அலுவலர் திரு. சிதம்பரம், கிராம உதவியாளர் திரு. காளீஸ்வரன் இவர்களுடன் 19.47 மணிக்கு புறப்பட்டு 22 மணிக்கு எஸ்.பி பட்டிணத்திலிருந்து மீமிசல் செல்லும் கிழக்க கடற்கரை சாலையில் எஸ்,பி. பட்டிணத்தை சேர்ந்த லேட், நாகூரலிக்கு சொந்தமான கெஸ்டவுசில் முன்னாடி உள்ள தென்னந்தோப்பில் நின்றுக் கொண்டிருந்த ராமேஸ்வரத்தைச் சேர்ந்த அப்துல்காதல் மகன் அல்லாபிச்சை என்பவரையும் எஸ்பி பட்டிணத்தைச் சேர்நத் லேட். நாகூர்கனி என்பவரது மகன் களந்தர் அலி என்பவரையும் ரகசிய தகவலாளி அடையாளம் காட்டி மறைய நாங்கள் மேறப்டி நபரிடம் சென்று 22 மணிக்கு சோதனை சம்மதக் கடிதம் தயார் செய்தும், உங்களை போதைப் பொருள் சம்பந்தமாக தனிக்கை செய்யவேண்டும் நீங்கள் விரும்பினால் அருகில் உள்ள நீதித்துறை நடுவர் முன்போ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் முன்போ செல்லலாம் என கூறியபோது , நீங்களே தணிக்கை செய்யலாம் என கூறியவர்களிடம் மேற்படி நபர்களை தணிக்கை செய்தபோது, மூன்று சாக்குமூட்டை இருந்தது. அதைப் பிரித்துப் பார்த்தில் அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சா இருந்தது. மேற்படி மூன்று மூட்டைகளை P1. P2. P3 என குறியீடு செய்தும், மேற்படி சாக்கு மூட்டைகளை நாங்கள் கொண்டு

சென்ற தராசில் எடைப் போட்டு பார்த்த போது பி1 மூட்டைகள் 45 கிலோவும் . பி 2 மூட்டையில் 45 கிலோவும் . பி3 மூட்டையில் 44 கிலோவும் மொத்தம் 134 கிலோ கஞ்சா இருந்தது- அதன் சந்தை மதிப்பு ரூ13,40,000 ஆகும். மேற்படி மூன்று மூட்டைகளிலிருந்தும் பகுப்பாய்விற்காக தலா 50 கிராம் வீதம் பி1 மூட்டையிலிருந்து எடுத்ததை எஸ் 1 என்றும், பி2 மூட்டையிலிருந்து எடுத்ததை எஸ் 2 என்றும், பி3 மூட்டையிலிருந்து எடுத்ததை எஸ் 3 என்றும், குறியீடு செய்தும், மேற்படி பகுப்பாய்விற்காக எடுத்த கஞ்சாவை காக்கி கவரில் வைத்து மடித்து விவரங்கள் எழுதி ஒட்டியும் NIB CID சீல் வைக்கப்பட்டது. பகுப்பாய்வு எடுத்தது போக மீதமிருந்த கஞ்சா மூட்டைகளை தனித்தனியாக சனலால் கட்டி NIB CID சீல் வைக்கப்பட்டது. பின்னர் ஏ 1 எதிரி ஆஜர் செய்த 2 நோக்கிய செல்போன்களையும், ஏ 2 ஆஜர் செய்த 1 நோக்கியா மற்றொரு போனையும் பணம் ரூ. 6300 ஐ ஆஜர் செய்ததை சாட்சிகள் கிராம நிர்வாக அலுவலர் சிதம்பரம், கிராம உதவியாளர் மற்றும் கியூ பிரான்ச் ஆய்வாளர் கென்னடி, உதவி ஆய்வாளர் பெரிய சாமி ஆகியோர் முன்னிலையில மகஜரில் ஆய்வாளர் கைப்பற்றினார். பின்னர் 0040 மணிக்கு 1 வது எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தையும், 2 வது எதிரி 1.30 மணிக்கு தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தையும் அதே சாட்சிகள் முன்னிலையில் ஆய்வாளர் பதிவு செய்தார். 17.10.2015 ம் தேதி 3 மணிக்கு தலைமைக் காலவர் ராஜாங்கமும், மற்றும் என் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். பார்வை மகஜரில் நானும், ராஜாங்கமும், சாட்சிகளாக கையெழுத்துப் போட்டோம். அந்த பார்வை மகஜர் **அசாஆ-1. பின்னர் எதிரிகள் மற்றும் தடயத்துடன் அதிகாலை 5 மணிக்கு ராமநாதபுரம் NIB CID நிலையம் வந்து** எதிரிகள் மீது இவ்வழக்கை பதிவு செய்ய ஆய்வாளருக்கு நான் உதவியாக இருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**கு.வி. இல்லை.**

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him / her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case, Pudukkottai.